**ஆறாம் வகுப்பு : இரண்டாம் பருவம்**

**தமிழ் : வினாவிடைத்தொகுப்பு**

**இயல்: 1**

**கவிதைப்பேழை : மூதுரை**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மாணவர்கள் நூல்களை....... கற்க வேண்டும். **விடை : மாசற**
2. இடமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது **விடை : இடம் + எல்லாம்**
3. மாசற என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது **விடை : மாசு + அற**
4. குற்றம் + இல்லாதவர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **விடை : குற்றமில்லாதவர்**
5. சிறப்பு+உடையார் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **விடை : சிறப்புடையார்**

**குறுவினா**

**1. கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?**

மன்னனையும் கற்றவரையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கற்றவரே சிறந்தவர். மன்னனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு. கல்வி கற்றவர்க்குச் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பு.

**சிந்தனை வினா**

**1.கல்லாதவர்க்கு ஏற்படும் இழப்புகளைப் பட்டியலிடுக.**

- ❖ மனிதனுக்குக் கண் போன்றது கல்வி.கண்இல்லை என்றால் இவ்வுலகமே இருட்டாக மாறி விடும்.
- ❖ கல்லாதவரை,யாரும் மதிக்கமாட்டார்கள்.

**2. கல்வியின் சிறப்பாக நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?**

கல்வியால் மனிதன் நல்லவை,தீயவை என்பதைப் பகுத்து அறிந்து உணரும் திறன் கல்வியால் நடந்ததால்,அதனைச் சிறப்பாகக் கருதுகின்றேன்.

**கவிதைப்பேழை : துன்பம் வெல்லும் கல்வி**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.மானவர் பிறர் .... நடக்கக் கூடாது. **விடை : தூற்றும்படி**

2.நாம்......சொல்படி நடக்க வேண்டும்.**விடை : மூத்தோர்**

3.கைப்பொருள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது **விடை : கை + பொருள்**

4.மானம் + இல்லா என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **விடை : மானமில்லா**

**சொற்றொடரில் அமைத்து எழுதுக**

**1. மனமாற்றம்** : திருடன் மனம் மாறினான்.
**2. ஏட்டுக் கல்வி** : ஏட்டுக்கல்வி கறிக்கு உதவாது.
**3. நல்லவர்கள்** : நாம் நல்லவர்களாக வாழவேண்டும்.
**4. சோம்பல்** : சோம்பல் அழிவைத் தரும்.

**குறுவினா விடை**

**1. நாம் யாருடன் சேரக் கூடாது?**

நாம் கோழைகளுடன் சேரக் கூடாது.

**2. எதை நம்பி வாழக் கூடாது?**

மாற்றார் கைப்பொருளை நம்பி வாழக் கூடாது.

**3.நாம் எவ்வாறு வாழ வேண்டும் எனப் பட்டுக்கோட்டையார் கூறுகிறார்?**

- ❖ அறிஞர்கள் கூறியஅறிவுரைகளின்படி வாழ வேண்டும்.
- ❖ பெற்ற தாயின் புகழும் புகழும் நம் தாய்நாட்டின் புகழும் அழியாத வகையில் வாழவேண்டும்.

**4. நாம் எவ்வாறு வாழ்ந்தால் பெருமை பெறலாம்?**

அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின்படி வாழ வேண்டும். அதன் மூலம் வெற்றிகளையும் விருதுகளையும் பெருமைகளையும் பெறலாம்.

**சிந்தனை வினா**

**நீங்கள் படித்து என்னவாகவிரும்புகிறீர்கள்? ஏன்?**

நான் படித்துச் சிறந்த மருத்துவராக விரும்புகிறேன். ஏழைகளுக்கு இலவச மருத்துவம் அளிப்பதற்காக மருத்துவம் படிப்பேன்.

**உரைநடை உலகம் : கல்விக்கண் திறந்தவர்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1.பள்ளிக்கூடம் செல்லாததற்கு ஆடு மேய்க்கும் சிறுவர்கள் கூறிய காரணம் **விடை :ஊரில் பள்ளிக்கூடம் இல்லை**

2.பசியின்றி என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக. **விடை : பசி + இன்றி**

3. படிப்பறிவு என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக **விடை:படிப்பு + அறிவு**

4. காடு + ஆறு என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் **விடை:காட்டாறு**

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

**1.வகுப்பு** : நான் ஆறாம் வகுப்பு படிக்கின்றேன்.
**2.உயர் கல்வி** : உயர்கல்வி உயர்வு தரும்.
**3.சீருடை** : பள்ளிக்குச் சீருடையில் செல்வேன்.

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. குழந்தைகள் பள்ளியில் ஏற்றத்தாழ்வின்றிப் படிக்க.. .. அறிமுகப்படுத்தினார். **விடை : சீருடைத் திட்டத்தை**

2. காமராசரைக் 'கல்விக் கண் திறந்தவர்' என மனதாரப் பாராட்டியவர் **விடை : தந்தை பெரியார்**

**குறு வினா**

**1.காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?**

பொறியியல் கல்லூரிகள், மருத்துவக்கல்லூரிகள், கால்நடை மருத்துவக் கல்லூரிகள், ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள்.

**2. காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி யாது?**

- ❖ காமராசர் முதல் அமைச்சராகப் பதவியேற்ற நேரத்தில் மூடப்பட்டு இருந்த பள்ளிகளைத் திறக்க ஆணையிட்டார்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**சிறுவினா**

**காமராசரின் கல்விப் பணிகள் குறித்து எழுதுக.**

- காமராசர் முதல் அமைச்சராகப் பதவியேற்ற நேரத்தில் மூடப்பட்டு இருந்த பள்ளிகளைத் திறக்க ஆணையிட்டார்.
- இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை கொண்டு வந்தார்.மதியஉணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்.
- சீருடைத் திட்டத்தைஅறிமுகம் செய்தார்.
- பொறியியல்,மருத்துவம்,கால்நடை மருத்துவம் கல்லூரிகள்,ஆசிரியப் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றைத் தொடங்கினார்.

**சிந்தனை வினா**

**நீங்கள் முதலமைச்சரானால் கல்வி முன்னேற்றத்திற்காக என்னென்ன திட்டங்களை வகுப்பீர்கள்?**

நான் முதலமைச்சரானால், தரமான இலவச கல்வி அளிப்பேன். தமிழ் மொழியையே பயிற்று மொழியாக்குவேன். கல்லூரி படிப்பு வரை இலவசக்கல்வி அளிப்பேன்.

**விரிவானம் : நூலகம் நோக்கி...**

**அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.**

**முன்னுரை**

அண்ணா நூலகம், ஆசியக் கண்டத்திலேயே இரண்டாவது பெரிய நூலகம் ஆகும்.

**தளங்களில் உள்ளவை**

1.தரைத்தளத்தில் பார்வைத் திறன் குறைபாடு உடையோருக்கான பிரிவு உள்ளது. அவர்கள் தொட்டுப் பார்த்துப் படிப்பதற்கான பிரெய்லி நூல்கள் உள்ளன.

2.முதல்தளம் குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்ட பகுதி.

3.இரண்டாம் தளத்தில்,சங்ககாலம் தொடங்கி இன்று வரை உள்ள அனைத்து தமிழ் நூல்களும் உள்ளன.

4.மூன்றாம் தளத்தில்,கணினி அறிவியல், தத்துவம், அரசியல் நூல்கள் உள்ளன.

5.நான்காம் தளத்தில், பொருளியல், சட்டம்,வணிகவியல், கல்வி போன்ற நூல்கள் உள்ளன.

6.ஐந்தாம் தளத்தில், கணிதம், அறிவியல்,மருத்துவம் சமபந்தமான நூல்கள் உள்ளன.

7.ஆறாம் தளத்தில், பொறியியல், வேளாண்மை,திரைப் படக்கலை சார்ந்த நூல்கள் உள்ளன.

8.ஏழாம் தளத்தில் பழமையான ஓலைச் சுவடிகள் சேகரித்துப் பாதுகாத்து வைக்கப்பட்டு உள்ளன.

9.எட்டாம் தளம் நூலகத்தில் கலையரங்கு,கருத்தரங்கக் கூடம், கண்காட்சி அரங்கு ஆகியனஉள்ளன.

**முடிவுரை:**

நூலக நூல்களைப் படிப்போம்! நூலகம் செல்வோம்.

**கற்கண்டு: இன எழுத்துகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் எது? **விடை : கல்வி**

2. தவறான சொல்லை வட்டமிடுக. **விடை : வென்ரான்**

**பின்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக.**

1.தென்றல் : தென்றல் 2.கன்டம் : கண்டம்

3.நன்ரி : நன்றி 4.மன்டபம் : மண்டபம்

**குறுவினா**

1.இன எழுத்துகள் என்றால் என்ன?

சில எழுத்துகளுக்கு இடையே ஒலிக்கும் முயற்சி,பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமை உண்டு.இவ்வாறு ஒற்றுமை உள்ள எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும்.

**கட்டுரை எழுதுக.**

**தலைப்பு: காமராசர்**

**முன்னுரை**

கல்விக் கண் தந்தவர்,கர்ம வீரர் என்று எல்லாம் பாராட்டப்படுபவர் காமராசர் அவர்கள்.அவரைப் பற்றி இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

**இளமைக்காலம்**

- காமராசர் விருதுப் பட்டியில் 15.7.1903இல் பிறந்தார்.
- இவரின் பெற்றோர் : குமாரசாமி ,சிவகாமி
- இயற்பெயர் : காமாட்சி
- வறுமை காரணமாக 6 ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்தார்.

**கல்விப்பணி**

- காமராசர் முதல் அமைச்சராகப் பதவியேற்ற நேரத்தில் மூடப்பட்டு இருந்த பள்ளிகளைத் திறக்க ஆணையிட்டார்.
- இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை கொண்டு வந்தார்.

**நிறைவேற்றிய திட்டங்கள்**

- மதியஉணவுத் திட்டத்தைக்கொண்டு வந்தார்.
- சீருடைத் திட்டத்தைஅறிமுகம் செய்தார்.
- பொறியியல்,மருத்துவம்,கால்நடை மருத்துவம் கல்லூரிகள்,ஆசிரியப் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றைத் தொடங்கினார்.
- நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம்,சர்க்கரை, சிமெண்ட் தொழிற்சாலை ஆகியவற்றை நிறுவினார்.

**முடிவுரை**

காலம் காமராசரை அழைத்தது.அவரின் திட்டங்கள் காலத்தை வென்றது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**இயல் : 2**

**கவிதைப்பேழை : ஆசாரக்கோவை**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.பிறரிடம் நான் …….பேசுவேன். **விடை:இன்சொல்**

2.பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்துக் கொள்வது…. ஆகும். **விடை:பொறை**

3.அறிவு + உடைமை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **விடை:அறிவுடைமை**

4.இவை + எட்டும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல். **விடை:இவையெட்டும்**

5. நன்றியறிதல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது **விடை:நன்றி + அறிதல்**

6.பொறையுடைமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது **விடை: பொறை+ உடைமை**

**குறுவினா**

**1.எந்த உயிருக்கும் செய்யக் கூடாது எது?**

எந்த உயிருக்கும் துன்பம் செய்யக் கூடாது.

**2.நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?**

நாம் நற்பண்புகள் உடையவரோடு நட்புக் கொள்ள வேண்டும்

**சிறு வினா**

**ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?**

பிறர் செய்த உதவியை மறவாதிருத்தல்; பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்ளுதல்; இனிய சொற்களைப் பேசுதல்; எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாது இருத்தல்; கல்வி அறிவு பெறுதல்;பிறருக்கு உதவுதல்; அறிவுடையவராய் இருத்தல்;நற்பண்புகள் உடையவரோடு நட்புக் கொள்ளுதல் ஆகிய எட்டும் ஆசாரக்கோவை கூறும் வித்துகள் ஆகும்.

**சிந்தனை வினா**

**1. உங்கள் நண்பரிடம் உங்களுக்குப் பிடித்த பண்புகளைப் பட்டியலிடுக.**

என் நண்பரிடம் எனக்குப் பிடித்த பண்புகள்.

இரக்கம், எளிமை, உதவி செய்தல், கீழ்ப்படிதல்,அன்பு, அமைதி,அடக்கம்,உண்மை , நன்றியுணர்வு.

**2.நல்ல ஒழுக்கங்களை வித்து எனக் கூறுவதின் காரணத்தைச் சிந்தித்து எழுதுக.**

விதை முளைத்து பெரிய மரமாகும்.அது போல நல்ல ஒழுக்கங்களை மனதில் விதைத்தால்,அது சான்றோனாக மாற்றும். எனவே நல்லொழுக்கங்களை வித்து என்பர்.

**கவிதைப்பேழை : கண்மணியே கண்ணுறங்கு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.பாட்டிசைத்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது. **விடை:பாட்டு + இசைத்து**

2. கண்ணுறங்கு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.. **விடை:கண் + உறங்கு**

3.வாழை + இலை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **விடை:வாழையிலை**

4.கை +அமர்த்தி என்பதனைச்சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **விடை:கையமர்த்தி**

5. உதித்த என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல் **விடை:மறைந்த**

**குறுவினா**

**1. இப்பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் யாவை?**

சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு.

**2.நமது வீட்டிற்கு வந்தவரை உபசரிக்கும் முறையாக நாட்டுப்புறப் பாடல் கூறுவது யாது?**

வீட்டிற்கு வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று அறுசுவை உணவளிக்க வேண்டும்.

**சிறு வினா**

**1.தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம்பாராட்டுகிறாள்?**

தமிழ்ச் சோலையில் பூ எடுத்து, இசையுடன் பாடி உலகம் புகழ வந்தாயோ! தங்கப் பூ பதித்த தந்தத்தால் ஆன தொட்டிலில் செல்லமாய் உறங்க வந்த சேரநாட்டின் முத்தோ! இல்லம் வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று அறுசுவை உணவளிக்கும் சோழ நாட்டின் முக்கனியோ! குளம் வெட்டி,அணைகட்டிக் குடிமக்களி பசியைப்போக்கும் பாண்டிய நாட்டின் முத்தமிழோ! கண்ணே கண்மணியே கண்மூடி உறங்குவாயாக என்று பாராட்டுகிறாள்.

**சிந்தனை வினா:**

**1.வாய்மொழி இலக்கிய வகைகளின் பெயர்களைத் தொகுக்க.**

கதைகள்,விடுகதைகள் ,கதைப்பாடல்கள்,பழமொழிகள்

**2.குழந்தைகளைக் கொஞ்சுவதற்குப் பயன்படுத்தப்படும் சொற்களைத் தொகுக்க.**

நிலவே, முத்தே, ஓவியமே, கிளியே,மயிலே, அன்னமே, பொன்னே,கண்ணே,பூவே,மாணிக்கமே,வைரமே,அன்பே ஆகியனவாகும்.

**உரைநடை உலகம் :தமிழர் பெருவிழா**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.கதிர் முற்றியதும்…. செய்வர். **விடை:அறுவடை**

2.விழாக்காலங்களில் வீட்டின் வாயிலில் மாவிலையால் … கட்டுவர். **விடை:தோரணம்**

3.பொங்கல் + அன்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **விடை:பொங்கலன்று**

4.போகிப்பண்டிகை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது **விடை:போகி + பண்டிகை**

5.பழையன கழிதலும் ........ புகுதலும். **விடை:புதியன**

6.பச்சைப் பசேல் என்ற வயலைக் காண இன்பம் தரும். பட்டுப் போன மரத்தைக் காண …. தரும். **விடை:துன்பம்**

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

**1.பொங்கல் :** பானையில் பொங்கல் செய்வர்.

**2.செல்வம் :** கல்வியே உயர்ந்த செல்வம்.

**3.பண்பாடு :** நம் பண்பாட்டைக் காக்க வேண்டும்.

**குறு வினா**

**1.போகிப்பண்டிகை எதற்காகக் கொண்டாடப்படுகிறது?**

பயனற்ற பொருள்களை நீக்கி வீட்டைத் தூய்மை செய்ய போகித் திருநாள் கொண்டாடப்படுகிறது.

**2.உழவர்கள் ஏன் மாடுகளுக்கு நன்றிசெலுத்துகின்றனர்?**

உழவுக்கும் உழவருக்கும் உற்ற துணையாக இருப்பதனாலும் உழவர்கள் மாடுகளுக்கு நன்றி செலுத்துகின்றனர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**சிறு வினா**

**1.காணும் பொங்கலை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர்?**

மாட்டுப் பொங்கலுக்கு அடுத்த நாள் காணும் பொங்கல் ஆகும். குடும்பத்தினருடன் விரும்பிய இடங்களுக்குச் சென்று மகிழ்வுடன் பொழுதைக்கழிப்பர். மேலும் பட்டிமன்றங்கள் , கலைநிகழ்ச்சிகள் முதலியவற்றை நடத்துவர். விளையாட்டுப் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றோருக்குப் பரிசுகளை வழங்கிப் பாராட்டுவர்.

**விரிவானம் :மனம் கவரும் மாமல்லபுரம்**

**மாமல்லபுரம் எப்படி உருவானது? அதற்குக் காரணமான நிகழ்வு யாது?**

மாமல்லன் சிறுவனாக இருந்தபோது ஒருநாள் அவர் தந்தையுடன்மாமல்லபுரம் கடற்கரைக்குச்சென்றார். ஒரு பாறையின் அருகில் விளையாடிக் கொண்டிருந்தார். அந்தப் பாறையின் நிழல் யானை போல் தரையில் விழுந்தது. அதை அவர் தந்தையிடம் காட்டினார். அவர் தந்தை 'ஆம் நரசிம்மா! இது யானை போலத்தான் தெரிகிறது. அதோ அந்தக் குன்றில் நிழலைப் பார். கோவில் போலத் தெரிகிறது' என்றார். மாமல்லான் 'ஆம் அப்பா! அந்தக் குன்றை கோவிலாகவும், இந்தக் குன்றைக் கோவில் முன் நிற்கும் யானை போலவும் மாற்றிவிட்டால் நன்றாக இருக்குமே' என்றார்.

'நல்ல சிந்தனை. இவை இரண்டை மட்டும்' அல்ல, இங்குள்ள ஒவ்வொரு குன்றையும் சிற்பமாக மாற்றலாம். ஒவ்வொரு பாறையையும் நந்தி, சிங்கம், யானை என்று மாற்றுவோம். இந்தக் கடற்கரையையே சிற்பக்கலைக் கூடமாக மாற்றிவிடலாம்' என்று கூறினார். இந்நிகழ்வே மாமல்லபுரம் உருவான நிகழ்வாகும்.

**2. மாமல்லபுரத்தில் அர்ச்சுனன் தபசு பாறையில் உள்ள சிற்பங்களைப் பற்றி எழுதுக.**

அர்ச்சுனன் தபசு பாறையில் மனிதர்கள், விலங்குகள், பறவைகள் போன்ற சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அர்ச்சுனன் கண்களை மூடி, இரு கைகளையும் உயர்த்தி, வணங்குவது போல ஒரு சிற்பம் உள்ளது. ஆகாய கங்கை பூமிக்கு வருவது போல ஒரு சிற்பம்உள்ளது.சிங்கம், புலி, யானை,அன்னப்பறவை,உடும்பு,குரங்குகள்எனஎல்லாமே உயிருள்ளவை போலச் செதுக்கப்பட்டுள்ளன.

**கற்கண்டு :மயங்கொலிகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

| | |
|---|---|
| 1) சிரம் என்பது | விடை :தலை |
| 2) இலைக்கு வேறு பெயர் | விடை:தழை |
| 3) வண்டி இழுப்பது | விடை:காளை |
| 4) கடலுக்கு வேறு பெயர் | விடை:பரவை |
| 5) பறவை வானில் | விடை:பறந்தது. |
| 6) கதவை மெல்லத் | விடை:திறந்தான் |
| 7) பூ... வீசும். | விடை:மணம் |
| 8) புலியின்.. .சிவந்து காணப்படும். | விடை:கண் |
| 9) குழந்தைகள்..விளையாடினர். | விடை:பந்து |
| 10) வீட்டு வாசலில்..போட்டனர். | விடை:கோலம் |

**தொடர்களில் உள்ள மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக.**

1)என் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மனம் வீசின.

**விடை**

1)என் வீட்டுத்தோட்டத்தில் மலர்கள் மணம் வீசின.

2) தேர்த் திருவிலாவிற்குச் சென்றனர்.

**விடை :2) தேர்த் திருவிழாவிற்குச் சென்றனர்.**

3) வாழைப்பலம் உடலுக்கு மிகவும் நல்லது.

**விடை :3)வாழைப்பழம் உடலுக்கு மிகவும் நல்லது.**

**குறு வினா**

**1.மயங்கொலி எழுத்துகள் யாவை?**

ண,ன,ந,ல,ள,ழ,ர,ற

**2.ண,ன,ந ஆகிய எழுத்துகள் பிறக்கும் முறையைக் கூறுக.**

**ண:**நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் பிறக்கும்.

**ன:** நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் முன்பகுதியைத் தொடுவதால் பிறக்கும்.

**ந :** நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடிப்பகுதியைத் தொடுவதால் பிறக்கும்.

**கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**"பொங்கல் திருவிழா"**

**முன்னுரை**

தமிழர் கொண்டாடும் விழாக்களில் சிறப்பானது பொங்கல் திருவிழாவாகும்.அதனை இக்கட்டுரையில் காண்போம்.

**போகித் திருநாள்**

வீட்டில் உள்ள பழைய பொருள்களை நீக்கி வீட்டைத் தூய்மை செய்யும் நாள் போகித் திருநாள்.இது மார்கழி மாதத்தின் இறுதி நாள் ஆகும்.

**பொங்கல் திருவிழா**

கதிரவனுக்கு நன்றி செலுத்தும் விழா பொங்கல் விழா. ஆடி மாதத்தில் விதைத்து தை மாதத்தில் அறுவடை செய்வர்.அறுவடை செய்த நெல்லில் தை மாதம் முதல் நாளில் பொங்கல் செய்து வழிபாடு செய்வர்.இதனை அறுவடைத் திருநாள் என்பர்.

**மாட்டுப் பொங்கல்**

பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல். உழவுக்குத் துணையாக உள்ள மாடுகளைக் குளிப்பாட்டி, கொம்புகளைச் சீவி,வண்ணமிட்டு பொங்கல் கொடுத்து வழிபடுபவர்.

**காணும் பொங்கல்**

மாட்டுப் பொங்கலுக்கு அடுத்த நாள் காணும் பொங்கல் ஆகும்.இந்நாளில் நண்பர் மற்றும் உறவினர் ஆகியோர் வீட்டிற்குச் சென்று கண்டு மகிழ்வர். விரும்பிய இடங்களுக்குச் சென்று உண்டு,விளையாடி மகிழ்வர்.

**முடிவுரை**

இயற்கையைப் போற்றும் விழா பொங்கல் விழா.உலகம் முழுவதும் தமிழர் போற்றும் விழா பொங்கல் விழா!



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**வாழ்வியல் : திருக்குறள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.விருந்தினரின் முகம் எப்போது வாடும்?
**விடை:நம் முகம் மாறினால்**

2.நிலையான செல்வம்.. **விடை:ஊக்கம்**

3.ஆராயும் அறிவு உடையவர்கள் ........... சொற்களைப் பேசமாட்டார். **விடை:பயன்தராத**

4.பொருளுடைமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது **விடை:பொருள் + உடைமை**

5. உள்ளுவது + எல்லாம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **விடை: உள்ளுவதெல்லாம்**

6.பயன் + இலா என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **விடை: பயனிலா**

**குறுவினா**

**1.எப்படி உண்பது விரும்பத்தக்கது அன்று?**
அமிழ்தமே ஆனாலும் விருந்தினர் இருக்கும் போது தான் மட்டும் உண்பது விரும்பத்தக்கது அன்று.

**2. எது தீமையானது என்று வள்ளுவர் கூறுகின்றார்?**
அடுத்தவர் பொருளைக் திருடலாம் என நினைப்பது தீமையானது.

**3.ஆக்கம் யாரிடம் வழிகேட்டுச் செல்லும்?**
தளராத ஊக்கம் உடையவனிடம் ஆக்கம் வழிகேட்டுச் செல்லும்.

**4.நாம் எத்தகைய சொற்களைப் பேசவேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார்?**
பயனுடைய சொற்களை மட்டுமே பேச வேண்டும்.

**இயல் :3**

**கவிதைப்பேழை :நானிலம் படைத்தவன்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.போர்களத்தில் வெளிப்படும் குணம் **விடை:வீரம்**

2.கல்லெடுத்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது **விடை:கல் + எடுத்து**

3.நானிலம் என்னும் சொல்லைப்பிரித்து எழுதக் கிடைப்பது **விடை:நான்கு + நிலம்**

4.நாடு + என்ற என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **விடை:நாடென்ற**

5.கலம் + ஏறி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **விடை:கலமேறி**

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

**அ)மாநிலம்** : நம் மாநிலம் தமிழ்நாடு.
**ஆ) கடல்** : கடலில் கப்பல் செல்லும்.
**இ) பண்டங்கள்** : எனக்கு இனிப்பு பண்டங்கள் பிடிக்கும்.

**குறுவினா**

**1. நான்கு நிலங்கள் என்பன யாவை?**
குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்.

**2. தமிழன் எதற்கு அஞ்சினான்?**
தமிழன் தீமைகளைச் செய்ய அஞ்சினான்.

**3. தமிழன் எதற்காகக் கண்டங்களைச் சுற்றி வந்தான்?**
முத்து, ஏலம், மிளகு ஆகியவற்றை வணிகம் செய்ய கப்பலில் கண்டங்களைச் சுற்றி வந்தான்.

**சிறு வினா**

**1.தமிழன் தான் வாழ்ந்த நாட்டினை எவ்வாறு உருவாக்கினான்?**
தமிழன் கல்,முள் நிறைந்த பெரிய நிலப்பரப்பைத் திருத்திப் பண்படுத்தினான்.வளத்தைப் பெருக்கினான். ஊர், நகரம், நாடு ஆகியவற்றை உருவாக்கி வாழும் பெருமையைப் பெற்றான். முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல் என நிலத்தை நால்வகைப்படுத்தினான் தமிழன்.

**2. தமிழனின் செயல்களாக முடியரசன் கூறுவன யாவை?**
தமிழன் நிலப்பரப்பைத் திருத்தினான். வளத்தைப் பெருக்கினான். ஊர், நகரம், நாடு ஆகியவற்றை உருவாக்கினான். நிலத்தை நால் வகைப்படுத்தினான். கடல்களைக் கடந்து பயணம் செய்தான். போர்களிலும் எளிதாக வெற்றி கண்டான். இமயமலையில் கொடியை நாட்டினான். கடலில் மூழ்கி முத்தெடுத்தான். கடல்வணிகம் செய்தான்.

**கவிதைப்பேழை : கடலோடு விளையாடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.கதிர்ச்சுடர் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது **விடை : கதிர் + சுடர்**

2.மூச்சடக்கி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது. **விடை: மூச்சு + அடக்கி**

3.பெருமை + வானம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **விடை:பெருவானம்**

4.அடிக்கும் + அலை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் **விடை:அடிக்குமலை**

**பாடல் வரிகளுக்கு ஏற்பப் பொருத்துக.**

அ) விடிவெள்ளி : விளக்கு
ஆ) மணம் : பஞ்சுமெத்தை
இ) புயல் : ஊஞ்சல்
ஈ) பனிமூட்டம் : போர்வை

**குறு வினா**

**1.அலையையும் மேகத்தையும் மீனவர்கள் என்னவாகக் கருதுகின்றனர்?**
கடல் அலையே தோழன், மேகமே குடை எனக் கருதுகிறார்கள்.

**2.கடல்பாட்டில் கண்ணாடியாகவும் தலைவனாகவும் குறிப்பிடுவன யாவை?**
முழு நிலவு : கண்ணாடி
தலைவன் : பெருவானம்.

**3.மீனவர்கள் தமது வீடாகவும் செல்வமாகவும் கருதுவன யாவை?**
மீனவர்கள்,கட்டுமரம் தமது வீடாகவும்;மீன்கள் அவர்களது செல்வமாகவும் கருதுகின்றனர்.

**உரைநடை உலகம்: வளரும் வணிகம்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர் **விடை:நுகர்வோர்**

2.வணிகம் + சாத்து என்பதனைச் சேர்த்து எழுதக்கிடைக்கும் சொல். **விடை:வணிகச்சாத்து**

3.பண்டம் + மாற்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல். **விடை:பண்டமாற்று**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4.வண்ணப்படங்கள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது. **விடை:வண்ணம் + படங்கள்**

5.விரிவடைந்த என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது **விடை :விரிவு + அடைந்த**

**பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

அ)வணிகம் : தமிழர் கடல் வணிகம் செய்தனர்.

ஆ)ஏற்றுமதி : தமிழர் மிளகை ஏற்றுமதி செய்தனர்.

இ)சில்லறை : என்னிடம் சில்லறை இல்லை.

ஈ)கப்பல் : கடலில் கப்பல் செல்லும்.

**குறுவினா**

**1. வணிகம் என்றால் என்ன?**

ஒரு பொருளைப் பிறரிடம் இருந்து வாங்குவதும் பிறருக்கு விற்பதும் வணிகம் ஆகும்.

**2. பண்டமாற்று முறைக்கு எடுத்துக்காட்டுத் தருக.**

நம்மிடம் கூடுதலாக இருக்கும் பொருள்களைக் கொடுத்து நமக்குத்தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்வது பண்டமாற்று வணிகம் ஆகும். நெல்லைக் கொடுத்து அதற்குப் பதிலாக உப்பைப் பெறுவது.

**3. சிறுவணிகப் பொருட்கள் யாவை?**

தலையில் சுமந்து சென்று விற்பதும்; தரைக்கடை அமைத்து விற்பதும்; தள்ளுவண்டியின் மூலம் விற்பதும்; போன்ற முறைகளில் விற்கும் பொருட்கள் சிறு வணிகப் பொருட்கள் ஆகும்.

**சிறுவினா**

1. சிறு வணிகம், பெரு வணிகம் வேறுபடுத்துக.

**சிறு வணிகம்**

1 சிறு முதலீட்டில் பொருட்களை வாங்கி வந்து விற்பனை செய்வது

2 வீதியில் கொண்டு சென்று விற்பது.

3 சில்லறை கொள்முதல் செய்வது.

4. சிறு லாபம் கிடைக்கும்

**பெரு வணிகம்**

1.பெரு முதலீட்டில் அதிக அளவில் விற்பது.

2.பெரிய அளவில் கடைகள் அமைத்து விற்பது

3.மொத்தமாக கொள்முதல் செய்வது.

4. பெரும் லாபம் கிடைக்கும்.

**2.பழந்தமிழர் ஏற்றுமதி, இறக்குமதி செய்த பொருள்கள் எவை?**

சீனத்திலிருந்து கண்ணாடி, கற்பூரம், பட்டு போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. அரேபியாவில் இருந்து குதிரைகள்வாங்கப்பட்டன.

**விரிவானம் உழைப்பே மூலதனம்**

**உழைப்பே மூலதனம் கதையைச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை:**

உழைப்பின் உயர்வை 'உழைப்பே மூலதனம் 'கதை என்னும் கதையில் காணலாம்.

**உழைப்பே மூலதனம்**

1.அருளப்பர் தமது பிள்ளைகள் வளவன்,அமுதா,எழிலன் ஆகிய மூவரையும் அழைத்து, நான் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஐம்பதாயிரம் ரூபாய் பணம் தருகிறேன். அதைக்கவனமாகப் பாதுகாத்து எனக்குத் திருப்பித்தர வேண்டும்.எனக் கூறி பணம் கொடுத்து வெளிநாட்டிற்குச் சென்றார்.

2. வளவன் உழவுத் தொழில் செய்து காய்கறிகளை விற்பனை செய்து லாபம் ஈட்டினான்.

3.அமுதா நாட்டுப் பசுக்களை வாங்கி, பராமரித்து,அவை தந்த பாலை விற்றாள். மேலும் தயிர், வெண்ணெய், நெய் போன்றவற்றை மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் விற்றுப் பொருள் ஈட்டினாள்.

4.எழிலன் தந்தை கொடுத்த பணத்தைப் பெட்டியில் வைத்து வீட்டின் பின்புறம் குழி தோண்டி மூடி வைத்தான்.

5.வளவனைக் கண்டு தந்தை மகிழ்ச்சி அடைந்து, அப்பணத்தை அவனையே வைத்துக் கொள்ளுமாறு கூறினார். தொடர்ந்து வேளாண்மை செய்ய ஊக்க மளித்தார்.

6.அமுதா தான் மாடுகள் வளர்ப்பு மூலமாக சேர்த்து வைத்த இரு மடங்கு பணத்தை தந்தையிடம் அளித்தாள் . தந்தை மகிழ்ச்சி அடைந்து, அப்பணத்தை அவளையே வைத்துக் கொள்ளுமாறு கூறி, தொடர்ந்து பண்ணையை நடத்த ஊக்கமளித்தார்.

7.அடுத்து எழிலனை அழைத்துப்பணத்தைக்கேட்க, புதைத்துவைத்து இருந்தபணத்தை எழிலன் கொடுத்தான்.தந்தை ஏமாற்றமடைந்தார். நீ என்னுடன் இருந்து தொழிலைக் கற்றுக்கொள் என்று தந்தை கூறினார்.

**முடிவுரை:**

உழைப்பின்சிறப்பைப் புரிந்து கொண்டான் எழிலன்.

**கற்கண்டு சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.என் வீடு...உள்ளது.**விடை: அங்கு**2. தம்பி..வா.**விடை: இங்கே**

3.நீர்....தேங்கி இருக்கிறது? விடை: இங்கே

4.யார்...தெரியுமா? விடை: அவர்

5. உன் வீடு.... அமைந்துள்ளது. விடை: எங்கே

**குறு வினா**

**1. சுட்டு எழுத்துகள் என்றால் என்ன? அவை யாவை?**

ஒன்றைச் சுட்டிக் காட்ட வரும் எழுத்துகள் சுட்டு எழுத்து எனப்படும். அ, இ, உ ஆகியன சுட்டு எழுத்துகள்.

**2. அகவினா, புறவினா வேறுபாடு யாது?**

வினாஎழுத்துகள் சொல்லின் அகத்தேஇருப்பது அகவினாஎனப்படும். வினாஎழுத்துகள் சொல்லின் புறத்தே இருப்பதுபுறவினா எனப்படும்.

**கடிதம் எழுதுக.**

**பிறந்த நாள் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.**

**10,தமிழ் நகர்,**
**....................(ஊர்)**
**நாள்:.................**

**அன்புள்ள மாமாவுக்கு,**

..........................(பெயர்) எழுதும் கடிதம்.நலம் நலமறிய ஆவல்.நீங்கள் பிறந்த நாள் பரிசாக அனுப்பிய,"அப்துல் கலாம் : வாழ்க்கை வரலாறு" என்னும் நூல் கிடைக்கப் பெற்றேன்.மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.நூலினைப் படித்துப் பார்த்தேன்.மிகவும் நன்றாக இருந்தது. நல்ல நூலைப் பிறந்தநாள் பரிசாக அனுப்பியதற்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மற்றவை நேரில்..

**நாள்:** **இப்படிக்கு,**
**இடம்:** **..................(பெயர்)**

**உறைமேல் முகவரி**

**பெறுநர்**
**அ.அருண்,**
**17,முல்லை நகர்,**
**கோவை:5**

ஆக்கம்
ச.சேட்டு மதார்சா,
தமிழாசிரியர்,
ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா
உயர்நிலைப் பள்ளி,
ஈரோடு-1



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com